# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 14 மடல் 12 டிசம்பர் – 2014 ₹1.00


## இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் சிறப்பாய்வுக் குழு வருகை



இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் சிறப்பாய்வுக் குழுவினர் 09.11.2014 அன்று கோயம்புத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தைப் பார்வையிட்டனர். பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கச் செயல்பாடுகள் பற்றி விளக்கிக் கூறினார். பயிற்சி மையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க. சிவக்குமார் அவர்கள் மையத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கிக் கூறினார். குழுத் தலைவர் டாக்டர் ஏ.டி. ஷெரீக்கர் மற்றும் உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.கே. ராய், டாக்டர் கே.என். அரவிந்த் கோஷ், உறுப்பினர்–செயலர் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவித் தலைமை இயக்குநர் டாக்டர் ஜி. வெங்கடேஷ்வர்லு ஆகியோர் பயிற்சி மைய வளாகம், மாதிரித் தீவனப் பயிர் பண்ணை, மாதிரி அசோலா தீவனப் பண்ணை மற்றும் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற பயனாளியின் கறவை மாட்டுப் பண்ணையைப் பார்வையிட்டனர்.

## பயிலரங்கு



கால்நடை மருத்துவத்திற்கான மாற்று ஆய்வுமையம்மூலம் காசநோய்க் கட்டுப்பாடு – வழிமுறைகள் குறித்த ஒரு நாள் பயிலரங்கு 10.11.2014அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் இங்கிலாந்தின் சர்ரே பல்கலைக்கழகத்தின் இணை முதல்வர் பேராசிரியர் ஜான்ஜோ மெக்ஃபாடன், கால்நடை நலம் மற்றும் கால்நடை ஆய்வக முகமையின் பணிக் குழுத் தலைவர் பேராசிரியர் மார்டின் வொர்டெர்மியர், சர்ரே பல்கலைக்கழகத்தின் அணுத்திரள் நுண்ணுயிரியல் பேராசிரியர் கிரகம் ஸ்டுவார்டு, குஜராத் தேசியப் பால்வள மேம்பாட்டு ஆணையத்தின் ஆலோசகர் டாக்டர் வி.ஏ. சீனிவாசன் ஆகியோர் பங்கேற்றனர். எதிர்காலத்தில் கால்நடைகளில் காசநோயைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்குவதற்கான குழு விவாதம் நடைபெற்றது. பல்கலைக்கழக அடிப்படை அறிவியல் புல முதல்வர் (பொ.) மற்றும் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் “காசநோய்க்கு எதிரான அடுத்த தலைமுறை தடுப்பு மருந்து” குறித்த அமர்விற்குத் தலைமை வகித்தார். பயிலரங்கில் 30 பேர் பங்கேற்றனர்.

## மண்டலப் பயிலரங்குகள்

பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககம்மூலம் “கால்நடை வளர்ப்பு மற்றும் சிகிச்சையில் ஏற்படும் களப் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள்” தொடர்பான நான்காவது மற்றும் ஐந்தாவது மண்டலப் பயிலரங்குகள் முறையே திருவாரூர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கு மற்றும் குன்றக்குடியிலுள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரியில் 13.11.2014 மற்றும் 20.11.2014ஆம் தேதிகளில் நடைபெற்றன. திருவாரூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் எம். மதிவாணன், இ.ஆ.ப., அவர்கள் திருவாரூரில் நடைபெற்ற பயிலரங்கிற்குத் தலைமை வகித்து, பயிலரங்கைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள் திருவாரூர் மற்றும் குன்றக்குடியில் நடைபெற்ற பயிலரங்குகளில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினார். பயிலரங்குகளில் கால்நடைப் பராமரிப்புத் துறை, ஆவின், புதுவாழ்வுத் திட்டம், தனியார் பால்பண்ணைகளைச் சார்ந்த 106 மற்றும் 203 அலுவலர்கள் பங்கேற்றனர்.

## கல்வி நிலையப் பணி

### சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி

### பயிலரங்கு

*“Minimally invasive image guided central venous access”* குறித்த பயிலரங்கு கல்லூரியின் கால்நடை நோய்க்குறியியல், நன்னெறி மற்றும் சட்டவியல் துறை மற்றும்அப்பலோ இடையீட்டு ஊடுகதிரியக்கவியல் நிலையம் மூலம் 16.11.2014 அன்று நடத்தப்பட்டது. ஊடுகதிரியக்கவியல், இதய இயக்க நோய் இயல் துறைகளைச் சார்ந்த 12 பயிற்சி

மருத்துவர்கள் மற்றும் 4 கால்நடை மருத்துவர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர். துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ.பி. நம்பி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அப்பலோ இடையீட்டு ஊடுகதிரியக்கவியல் நிலையத்தின் டாக்டர் சதீஷ் ராமமூர்த்தி அவர்கள் பயிலரங்கிற்குத் தேவையான உதவிகள் செய்தார்.

### பன்னாட்டுப் பயிற்சி

கல்லூரியின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறைமூலம் “சிறிய அசைபோடும் விலங்குகளின் கண் விழி சார்ந்த அறுவைச்சிகிச்சை” குறித்த பன்னாட்டுப் பயிற்சி 17.11.2014முதல் 21.11.2014வரை நடத்தப்பட்டது. மலேசியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளைச் சார்ந்த 5 மருத்துவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

### தேசிய நூலக வார விழா




கல்லூரியில் தேசிய நூலக வார விழா (14–20, நவம்பர்) கொண்டாடப்பட்டது. இதையொட்டி, நூலக அறிவியல் துறைமூலம் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் பயனடையும் நோக்கில் “கல்விசார் புத்தகக் கண்காட்சி” 14.11.2014அன்று நடத்தப்பெற்றது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் கண்காட்சியைத் துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சொ.ரா. சீனிவாசன் அவர்கள் பங்கேற்றார். ஏராளமான மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் புத்தகக் கண்காட்சியைப் பார்வையிட்டனர். *CeRA, KrishiKosh, AgriCat, Krishi Prabha, NAAS Rating* தொடர்பான கால்நடை மருத்துவ அறிவியல் சார்ந்த இணைய இதழ்கள், அண்மைக்கால நிகழ்ச்சிகள் குறித்த செய்தித் துணுக்குகள் மற்றும் மடிப்பிதழ்கள் ஆகியவை அனைத்துத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டன.

### சிகிச்சையியல் பயிற்சி

பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநரகம் மூலம் நாய்களில் ஏற்படும் தோல் நோய் மற்றும் சிகிச்சை, இனப்பெருக்கக் கட்டுப்பாடு, நாய்களில் ஏற்படும் எலும்பு மற்றும் தசை நோய்கள் மற்றும் பராமரிப்பு, சிறிய பிராணிகளில் கதழ்ஒலிப் பயன்பாடு குறித்த பயிற்சிகள் முறையே கல்லூரியிலுள்ள நோய்க்குறியியல், நன்னெறி மற்றும் சட்டவியல் துறை, இனப்பெருக்கத் துறை, அறுவைச் சிகிச்சைத் துறை மற்றும் சிகிச்சைத் துறை ஆகியவற்றில் 08.10.2014 முதல் 10.10.2014 வரை நடத்தப்பட்டன. பயிற்சிகளில் மொத்தம் 40 கால்நடை மருத்துவர்கள் கலந்து கொண்டனர். பயிற்சிகளுக்கு ஐதராபாத்தில் உள்ள இந்தியன் இம்னோலாஜிகல்ஸ் லிமிடெட் நிறுவனம், மார்ஸ் இண்டர்நேஷனல் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஆகியவை நிதி உதவி அளித்தன.

## நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### கல்லூரி, விடுதி மற்றும் விளையாட்டு நாள் விழா

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கல்லூரி மற்றும் விடுதி நாள் விழா 28.11.2014அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் கொ. ஆ. துரைசாமி அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை வாசித்தார். விடுதிக் காப்பாளர் முனைவர் கு. பாலசுந்தரம் அவர்கள் விடுதி ஆண்டு அறிக்கையும், முனைவர் ம.ரா. புருசோத்தமன் அவர்கள் ஆராய்ச்சி செயல்பாட்டு அறிக்கையும் வாசித்தனர். விழாவில் மதுரை உணவுப் பொருள் வழங்கல் சிறப்புப் புலனாய்வுத் துறையின் காவல் துறைக் கண்காணிப்பாளர் மற்றும் கல்லூரியின் முன்னாள் மாணவர் மருத்துவர் பி. சாமிநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கல்லூரியின் முதல் மதிப்பெண் பெற்றவர்களுக்கும் நாட்டுநலப் பணித் திட்டம் மற்றும் தேசியப் படையில் சிறந்து விளங்கியவர்களுக்கும் பரிசுகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாணவர் சங்கத் துணைத் தலைவர் முனைவர் கே. மணி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். செல்வன் ஆர். மணிகண்டன் நன்றி கூறினார்.

கல்லூரியின் விளையாட்டு விழா 26.11.2014அன்று நடைபெற்றது. விழாவில் சங்ககிரி வருவாய்க் கோட்டாட்சியர் மற்றும் கல்லூரியின் முன்னாள் மாணவர் மருத்துவர் சி. பால் பிரின்ஸ்லே ராஜ்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக்



கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் கொ. ஆ. துரைசாமி அவர்கள் தலைமை உரையாற்றினார். விழாவிற்கு வருகைபுரிந்தோர்களை உடற்கல்விச் செயலாளர் முனைவர் எஸ். தர்மசீலன் அவர்கள் வரவேற்றார். உடற்கல்வி இணைச் செயலாளர் முனைவர் சி. கதிர்வேலன் அவர்கள் விளையாட்டு ஆண்டு அறிக்கை வாசித்தார். உடற்கல்வி மாணவப் பிரதிநிதி செல்வன் சி. ராஜ்குமார் நன்றி கூறினார்.

### குளிர்காலப் பயிற்சி

கல்லூரியின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கத் துறைமூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியில் “கால்நடை சார்ந்த வாழ்வாதாரங்களின் இன்றைய நிலவரம் மற்றும் எதிர்காலம்” என்ற தேசியக் குளிர்காலப் பயிற்சி 05.11.2014முதல் 25.11.2014வரை 21 நாட்கள் நடத்தப்பட்டது. கோயம்புத்தூரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கரும்பு இனப்பெருக்க நிலைய முதுநிலை

அறிவியலாளர் முனைவர் வெ. வேங்கடசுப்ரமணியன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சியைத் துவக்கி வைத்துப் பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டுத் துவக்கவுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் பயிற்சியின் குறுந்தகட்டை வெளியிட்டுத் தலைமை உரையாற்றினார். கால்நடைப் பராமரிப்புத் துறையின் நாமக்கல் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் பி. சக்திவேலு, புதுதில்லி, இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் பி.வி.கே. சசிதர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் புல முதல்வர் முனைவர் ஜெ. வசந்தகுமார் அவர்கள் நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பயிற்சியில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி நிறைவு உரை ஆற்றினார். பல்வேறு மாநிலங்களின் கால்நடை/வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிறுவனங்களிலிருந்து மொத்தம் 23 பேர் பயிற்சியில் பங்கேற்றனர்.

### முத்தமிழ் விழா

கல்லூரியில் 27.11.2014அன்று முத்தமிழ் விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். கால்நடைப் பராமரிப்புத் துறையின் ஓய்வுபெற்ற மண்டல இணை இயக்குநர் மற்றும் கோயம்புத்தூர், புதுவாழ்வுத் திட்டத்தின் பால்வள மேம்பாட்டு ஆலோசகர் மருத்துவர் ம. இளஞ்செழியன் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு “இளந்தென்றல்” மாணவர் படைப்பிதழை வெளியிட்டு, போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். அந்திமழை இதழ் நிறுவனர் மற்றும் ஆசிரியர் மருத்துவர் ந. இளங்கோவன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். தமிழ்மன்ற அமைப்பாளர் பேராசிரியர் முனைவர் க. பாலசுந்தரம் அவர்கள் தமிழ் மன்ற அறிக்கை வாசித்தார். தமிழ்மன்ற மாணவர் செயலர் செல்வி ந. மகாலட்சுமி வரவேற்புரை ஆற்றினார். இளந்தென்றல் இதழின் ஆசிரியர் செல்வன் பா. ஆரிப் இதழ் குறித்து அறிக்கை வழங்கினார். இறுதியாகத் தமிழ் மன்ற இணைச் செயலர் செல்வன் பிரபாகரன் நன்றி கூறினார்.

### அலம்பிக் மருந்து நிறுவன விருது




கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களில் ஒட்டுமொத்தத் தரப் புள்ளிச் சராசரியில் (ஓஜிபிஏ) முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்ற டாக்டர் ச. சசிகுமார் மற்றும் டாக்டர் கே. இனியா ஆகியோர் மும்பை, அலம்பிக் மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் கால்நடை மருத்துவப் பிரிவின் எக்சப்ட் (X-ceft) மற்றும் எம்சப்ட் (M-ceft) விருதுகளைப் பெற்றனர். விருதினைக் கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் வழங்கினார்.

## திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### மாநில அளவிலான பயிற்சி

கல்லூரியின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறையும் ஆத்மாவும் இணைந்து “கால்நடை மற்றும் கோழியின வளர்ப்பில் நவீன மேலாண்மைமூலம் நிலையான வருமானத்தைப் பெருக்குதல்” குறித்த மாநில அளவிலான பயிற்சியை 17.11.2014முதல் 21.11.2014வரை நடத்தின. 10 முன்னோடிப் பண்ணையாளர்கள் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர். 21.11.2014அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் தலைமைவகித்து, தனுவாஸ் தாதுஉப்புக் கலவை மற்றும் கறவைமாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, வான்கோழி வளர்ப்பு குறித்த புத்தகங்களைப் பயனாளிகளுக்கு வழங்கினார்.

### வேளாண் கண்காட்சி



புதிய தலைமுறை தொலைக்காட்சி 21.11.2014முதல் 23.11.2014வரை நடத்திய வேளாண் கண்காட்சியில் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பங்கேற்று, நாமக்கல் கோழி –1, நாமக்கல் காடை மற்றும் நாமக்கல் கோல்டு காடை, பண்ணைக் கருவிகள், பசுந்தீவனக் கரணைகள், வெளியீடுகள், பல்கலைக்கழகத் தொழில்நுட்பங்கள் மற்றும் கல்லூரியின் பணிகள் மற்றும் சாதனைகள் பற்றிய விளக்கப் படங்கள் ஆகியவற்றைக் காட்சிக்கு வைத்து, பண்ணையாளர்களுக்கு விளக்கமளித்தது. இதற்கான ஏற்பாடுகளைக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறை செய்தது.

## ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### சிறப்புக் கால்நடை மருத்துவ முகாம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பல்கலைக்கழகத்தின் பணிகளை

Posted on 23.12.2014 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 22.12.2014

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/12-14
Registration No.TN/TBM/32/2012-14

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. D. Thyagarajan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. D. Thyagarajan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**



மக்களிடையே பரப்புவதற்காகச் சிறப்புக் கால்நடை மருத்துவ முகாமை 08.11.2014அன்று புதூர் கிராமத்தில் நடத்தியது. கல்லூரி முதல்வர் முனைவர் சி. வீரபாண்டியன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் 14 மாடுகளுக்கு மலட்டுத் தன்மை நீக்கச் சிகிச்சை அளிக்கப்பட்டது, 4 மாடுகளுக்குச் சினைப்பருவ ஒருங்கிணைப்புக்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், , பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட 65 கால்நடைகளுக்குச் சிகிச்சையும், 37 வெள்ளாடுகளுக்குக் குடற்புழு நீக்கமும் செய்யப்பட்டன. முகாமில் பயனாளிகளுக்குக் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மேலாண்மை வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வுக் கையேடுகள் வழங்கப்பட்டன.

### மரம் நடும் விழா

தஞ்சாவூர், மாவட்ட நிர்வாகம் சார்பாகக் கல்லூரி வளாகத்தில் 30.11.2014அன்று 1000 மரக் கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சி. வீரபாண்டியன் அவர்கள் கலந்துகொண்டு மரக்கன்றினை நட்டுத் துவக்கிவைத்தார். மேலும் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் உறந்தைராயன் குடிகாடு, புலவன்காடு, தென்னமநாடு, கண்ணந்தங்குடி மேலையூர் ஆகிய கிராமங்களின் ஊராட்சி மன்றங்கள் சார்பாக நடத்தப்பட்ட மரம் நடும் விழாக்களில் கலந்து கொண்டு மரக் கன்றுகளை நட்டனர்.

## விரிவாக்கப் பணி

### சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்மூலம் வெள்ளாடு வளர்ப்பு, கறவைமாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு மற்றும் முயல் வளர்ப்பு ஆகிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் தருமபுரி, மதுரை, மேல்மருவத்தூர், இராஜபாளையம், சேலம், தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம், தேனி உழவர் பயிற்சி மையம், மாதவரம் கோழியின ஆராய்ச்சி நிலையம் மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை ஆகியவற்றில் நவம்பர் 2014இல் நடத்தப்பட்டன. பயிற்சிகளில் 48 பேர் பதிவுசெய்து பயிற்சியை நிறைவுசெய்தனர்.

### பயிற்சி

காஞ்சிபுரம், உழவர் பயிற்சி மையம்மூலம் காஞ்சிபுரத்தின் ஊரக இளைஞர்களுக்காக “மாடுகளில் செயற்கைமுறைக் கருவூட்டல்” குறித்த ஒரு மாத கால வளாகப் பயிற்சி, தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமையின் நிதியுதவியுடன் நவம்பர் 2014இல் நடத்தப்பட்டது. மேலும், காஞ்சிபுரத்தின் 25 மகளிர் சுய உதவிக் குழுப் பண்ணையாளர்களுக்காக “கறவை மாடு வளர்ப்பும், பால் பொருட்கள் தயாரிப்பும்” குறித்த மூன்று நாள் பயிற்சி 07.11.2014முதல் 13.11.2014வரை நடத்தப்பட்டது.

### வானவில் – வாரச் சந்தை

காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் நிலையமும் காஞ்சிபுரம், ஒருங்கிணைந்த கால்நடை உற்பத்தியாளர் சங்கமும் இணைந்து, வேளாண் அறிவியல் நிலையப் பண்ணையாளர்களின் வேளாண் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களை விற்பனைசெய்ய “வானவில்–வாரச் சந்தையை” 15.11.2014அன்று துவக்கின. பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள் வாரச் சந்தையைத் துவக்கிவைத்து, துவக்கவுரை ஆற்றினார். வேளாண் அறிவியல் நிலையத்தில் பயிற்சிபெற்ற 40 பண்ணையாளர்கள்/ தொழில்முனைவோர்கள் தங்கள் பொருட்களை வாரச் சந்தையில் விற்பனைக்கு வைத்திருந்தனர்.

### பணி ஒய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நோய்க் குறியியல் துறையின் திறனறி பணியாளர்(முதுநிலை) திரு. என். வேலாயுதம் அவர்கள் 30.11.2014அன்று பணி ஒய்வு பெற்றார். 09.11.1954இல் பிறந்த இவர், மொத்தம் 29 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.